ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2512/47 - 2026 ඔක්තෝම්බර් මස 31 වැනි සෙනසුරාදා - 2026.10.31

2512/47 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

தெங்கு வளர்த்தல் தொழிலுக்கான சம்பளச் சபை

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 136) பிரிவு 29(3) இன் ஏற்பாடுகளுக்கமைவாக, இதிலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேற்படி கட்டளைச் சட்டத்தின் பிரிவு 30 இன் மூலம் தெங்கு வளர்த்தல் தொழிலுக்கான சம்பளச் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என இத்தால் அறிவிக்கப்படுகின்றது

மேற்படி தீர்மானங்கள் இவ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து நடைமுறைக்கு வருகின்றன

எஸ். எம். பியதிஸ்ஸ,
செயலாளர்
தொழில் அமைச்சு.

''மெகவர பியச''
கொழும்பு 05,
2026, ஒற்றோபர் 20.

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அட்டவணை

தெங்கு வளர்த்தல் தொழிலுக்கான சம்பளச் சபையால் மேற்கொள்ளப்பட்டதும், 1949, ஏப்பிறல் 30 ஆந் திகதிய 99/71 ஆம் இலக்க விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான அறிவித்தலின் அட்டவணையில் தரப்பட்ட தீர்மானங்கள் காலத்துக்குக்காலம் மாற்றியமைக்கப்பட்டதுடன், இறுதியாக 2018.09.25 ஆந் திகதிய 2090/14 ஆம் இலக்க விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலினால் மாற்றியமைக்கப்பட்டது. அவ்வட்டவணையின் பகுதி II இற்கு பின்வரும் புதிய பகுதிளை மாற்றீடு செய்வதன் மூலம் அது மேலும் மாற்றியமைக்கப்படுகின்றது.

பகுதி II

துண்டு வேலைக்குரிய வேலையாட்களுக்கான ஆகக்குறைந்த சம்பள வீதமானது பின்வருமாறு

	செயற்பாடு	வீதம் ரூ. ச.
(1)	தென்னந்தோப்பை வளர்ப்பதிலும் பராமரித்தலும், தேங்காய்களைப் பறித்தல் - ஒவ்வொரு 1000 மரங்களுக்கும்	5,400.00
(2)	கொப்பரா உற்பத்தி, தேங்காய்களை உரித்தலும், உடைத்தலும், கொப்பரா பதனிடுதலும் வேறாகலும் - ஒவ்வொரு 1000 தேங்காய்களுக்கு	1,450.00

பகுதி III

	செயற்பாடு	வீதம் ரூ. ச.
(அ)	தெங்குப் பெருந்தோட்டப் பயிர்களை வளர்த்தலும் பேணுதலும்	1,350.00
(ஆ)	கொப்பராவை உற்பத்தி செய்தல்	
	எல்லா வேலையாட்களுக்கும் மேற்படி செய்ற்பாடுகளுக்கு நாளொன்றுக்குரிய நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பள வீதங்கள்	

இந்தப் பகுதியின் மேற்படி ஏற்பாடுகளுக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், ஞாயிற்றுக்கிழமைகளில் கால்நடைப் பராமரிப்பில் ஈடுபட்டுள்ள எந்தத் தொழிலாளிக்காயினும் நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம் சாதாரண வேலை நாளொன்றில் அத்தகைய வேலைக்காக வழங்குவதற்குக் குறிக்கப்பட்ட ஆகக் குறைந்த சம்பள வீதத்தில் ஒன்றரை மடங்காக இருத்தல் வேண்டும்.

பகுதி III (அ)

செயற்பாடு
(அ) நடத்துனர் ஒருவரின் வேலைக்கு (ஆ) காவலாளி ஒருவரின் வேலைக்கு உரிய நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம்

ஏக்கர் அளவு	காவலாளி (ரூ. ச.)	நடத்துனர் (ரூ. ச.)
(1) பரப்பளவில் 10 ஏக்கருக்குக் குறையாத, ஆனால் 25 ஏக்கருக்குக் குறைந்த தென்னந்தோட்டம் அல்லது அதன் ஏதேனும் பிரிவு	33,750.00	-
(2) பரப்பளவில் 25 ஏக்கருக்குக் குறையாத ஆனால் 50 ஏக்கருக்குக் குறைந்த தென்னந்தோட்டம் அல்லது அதன் ஏதேனும் பிரிவு	34,750.00	35,250.00
(3) பரப்பளவில் 50 ஏக்கருக்குக் கூடிய தென்னந்தோட்டம் அல்லது அதன் ஏதேனும் பிரிவு	35,750.00	36,250.00

EOG 10 - 0394